



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 356 | 18.06.2026 | THURSDAY | AANI : 4 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 356 | 18.06.2026 | புதன்கிழமை | ஆனி : 4 | விலை : ரூ.5/– |


## த.வெ.க. அரசின் முதல் கூட்டம்

# "சட்டசபை இன்று கூடுகிறது"

## கவர்னர் உரையாற்றுகிறார்

சென்னை, ஜூன்.18-

த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டம் இன்று (வியாழக்கிழமை) தொடங்குகிறது. காலை 10 மணிக்கு தொடங்கும் இந்த கூட்டத்தில் கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உரையாற்றுகிறார்.

தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் 23ந் தேதி நடைபெற்ற 17 வது சட்டசபை தேர்தல் முடிவுகள் மே மாதம் 4ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு அறிவிக்கப்பட்டன. 59 ஆண்டு கால திராவிட கட்சிகளின் (தி.மு.க., அ.தி.மு.க.) ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

என்றாலும், பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்கள் த.வெ.க.வுக்கு கிடைக்காமல் போனதால், ஆட்சி அமைப்பதில் சிக்கல் நீடித்தது. ஒரு வழியாக, காங்கிரஸ் (5), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு (2), இந்திய கம்யூனிஸ்டு (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகள் ஆதரவு அளித்ததால், த.வெ.க.வின் (107) பெரும்பான்மைக்கு



தேவையான 120 இடங்கள் கிடைத்தன.

முதல்அமைச்சர் விஜய்

அதனைத் தொடர்ந்து, கடந்த மாதம் (மே) 10ந் தேதி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற பிரமாண்ட விழாவில், தமிழகத்தின் 12வது முதல் அமைச்சராக விஜய் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருடன் 9 அமைச்சர்களும் பதவியேற்றனர். அடுத்த நாள் (மே 11) சட்டசபையில் நடந்த நிகழ்வில் புதிய எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு தற்காலிக சபாநாயகர் மு.வெ.கருப்பையா பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

தொடர்ந்து, மே 13ந் தேதி சட்டசபையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க. அரசு வெற்றி பெற்றது. ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் கிடைத்தன. 5 பேர் நடுநிலை வகித்தனர். தி.மு.க. வெளிநடப்பு செய்தது.

அதன்பின்னர், மே 21ந் தேதி நடைபெற்ற 2வது அமைச்சரவை விரிவாக்கத்தில் 23 பேரும், 22ந் தேதி நடைபெற்ற 3வது அமைச்சரவை விரிவாக்கத்தில் 2 பேரும் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

புத்தாக்க பயிற்சி

17வது சட்டசபைக்கு தேர்வு செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்களில் 146 பேர் புதியவர்கள். முதல் முறையாக அவைக்கு வருபவர்கள். எனவே, சட்டசபை மரபுகள் என்ன, அவையில் எதை பேசவேண்டும், எதை பேசக்கூடாது என்பதை எம்.எல்.ஏ.க்கள் தெரிந்துகொள்வதற்காக 2 நாள் புத்தாக்க பயிற்சி சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று தொடங்கியது. இந்த பயிற்சியை முதல் அமைச்சர் விஜய் தொடங்கிவைத்தார்.

முதல் சட்டசபை கூட்டம்

இந்த நிலையில், த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டம் இன்று (வியாழக்கிழமை) தொடங்குகிறது. காலை 10 மணிக்கு தொடங்கும் இந்த கூட்டத்தில் கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உரையாற்றுகிறார்.

இதற்காக, கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் இருந்து காலை 9.30 மணியளவில் கவர்னர் அர்லேகர் காரில் புறப்படுகிறார். காலை 9.50 மணிக்கு தலைமைச் செயலகம் வரும் அவரை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் பூங்கொத்து கொடுத்து, சால்வை அணிவித்து வரவேற்கிறார்.

கவர்னர் உரை

அதன்பின்னர், கவர்னர் அர்லேகர் அவைக்கு அழைத்து வரப்படுகிறார். காலை 10 மணிக்கு சபாநாயகர் இருக்கைக்கு வரும் அவர், தனது உரையை ஆங்கிலத்தில் தொடங்குகிறார். இந்த உரை சுமார் 1 மணி நேரம் இடம்பெறும் என்று தெரிகிறது.

அதன்பின்னர், கவர்னர் அர்லேகரின் உரையை, வலதுபுற இருக்கையில் அமர்ந்திருக்கும் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தமிழில் வாசிப்பார். இடதுபுற இருக்கையில் கவர்னரின் முதன்மை செயலாளர் ஷஜன் சிங் சவான் அமர்ந்திருப்பார்.

விவாதம்

கூட்டம் முடிந்ததும் அனைத்து உறுப்பினர்களிடமும் விடைபெற்று கவர்னர் அர்லேகர் புறப்பட்டு செல்வார். அதன்பின்னர், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்வதற்காக, அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் நடைபெறும். சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், கூட்டத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது முடிவு செய்யப்படும். அனேகமாக 3 அல்லது 4 நாட்கள் சட்டசபை கூட்டம் நடைபெறும் என்று தெரிகிறது.

## ரூ.1 கோடி மான நஷ்டஈடு கேட்டு மு.க.ஸ்டாலினுக்கு நோட்டீஸ்: அமைச்சர் ஆதவ் அர்ஜூனா அனுப்பினார்

சென்னை: ஜூன்.18-

ரூ.1 கோடி மான நஷ்டஈடு கேட்டு திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.



அமலாக்கத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பை சுட்டிக்காட்டி, 'ரூ.258 கோடி மதிப்பிலான போதைப் பொருள் கடத்தலில் மூளையாக செயல்பட்ட ஜான் பிரிட்டோ, தவெக அரசின் பொதுப் பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவின் நெருங்கிய உறவினர் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை அம்பலமாகியுள்ளது' என திமுக தலைவர் ஸ்டாலின், கட்சியின் எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இது தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக கூறி ஆதவ் அர்ஜூனா தரப்பில் திமுக தலைவர் ஸ்டாலினுக்கும், திமுக ஐ.டி. பிரிவுக்கும் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

ஆதவ் அர்ஜூனா சார்பில் வழக்கறிஞர்கள் ஏ.பி.சூரியபிரகாசம், ஆர்.மோகன் பார்த்தசாரதி ஆகியோர் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். அதில், 'அமலாக்கத் துறை செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள ஜான் பிரிட்டோ எனது உறவினர் அல்ல.

இது சம்பந்தமாக எனது உறவினர் ஜான் பிரிட்டோ ஊடகங்களில் விளக்கம் அளித்துள்ளார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட பதிவுக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்.

ரூ.1 கோடிமான நஷ்டஈடு வழங்க வேண்டும். தவறினால் குற்றவியல் மற்றும் உரிமையியல் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என கூறப்பட்டுள்ளது.

## பாலியல் வன்கொடுமைகள் குறித்து முதல்வர் விஜய் மவுனம் ஏன்? நயினார் நாகேந்திரன்

சென்னை: ஜூன்.18-

"பாலியல் வன்கொடுமைகள் குறித்து முதல்வர் விஜய் பேசுவதில்லை. கரூர் சம்பவம் போல, பாலியல் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் பனையூரில் வந்து தன்னை சந்திக்க வேண்டும் என நினைக்கிறாரா?" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "சூலூரில் 10 வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்தது இன்றுவரை முதல்வர் விஜய்க்கு தெரியுமா? நேற்று முன்தினம் மூன்று வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து, முட்புதரில் வீசியது முதல்வருக்கு தெரியுமா" நெல்லையில் மட்டும் 7 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடந்துள்ளன.

முதல்வர் விஜய் டிஃபன் கொண்டு வருகிறார்; டிஃபன் கேரியர் வைத்திருக்கிறார். டிபன் சாப்பிடுகிறார் ஆனால் பேச மாட்டார். சினிமாவில் பிரபலமாக இருப்பவர்களை அழைத்துப் பேசி, படம் எடுத்துக் கொள்வார்.

பாலியல் வன்கொடுமைகள் குறித்து முதல்வர் பேசுவதில்லை; பேட்டி கொடுப்பதில்லை, பாதிக்கப்பட்டவர்களை சந்திப்பதில்லை. கரூர் சம்பவம் போல, பாலியல் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் பனையூரில் வந்து தன்னை சந்திக்க வேண்டும் என நினைக்கிறாரா விஜய்?,

ஆறு மாதத்தில் இடைத்தேர்தல் வர வேண்டியதன் அவசியம் என்ன?. குதிரை பேரம் நடப்பதாக பொன். ராதாகிருஷ்ணன் நேற்று சொல்லி இருந்தார். டிடிவி தினகரன் கட்சியிலிருந்து காமராஜை குதிரை பேரம் பேசி விலைக்கு வாங்கினார்கள். இது குறித்து உடனே சிபிஐ விசாரித்து அவர்களை தண்டிக்க வேண்டும். அவர்களை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என கோரிக்கை வைத்திருக்கிறோம்.

அதிமுகவிலிருந்து ஒவ்வொருவராக விலை பேசி ஆதவ் அர்ஜூனா வாங்கிக் கொண்டிருக்கிறார். குதிரை பேரும் நடைபெறுகிறது என ஊடகங்கள் தெரிவிக்க வேண்டும். எல்லா நாளும் ஒரே நாள் போல இருக்காது; வருங்காலம் பாஜகவின் காலமாக இருக்கும்" இவ்வாறு அவர் பேசினார்.

## சிறப்பு 'டெட்' தேர்வை ஒரு மாதம் தள்ளிவைக்க வேண்டுகோள்

சென்னை: ஜூன்.18-

பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் நிறுவனர் அ.மாயவன், நிறுவன தலைவர் சி.ஜெயக்குமார், பொதுச்செயலாளர் மா.குமரேசன் உள்ளிட்டோர் பள்ளிக்கல்வி அமைச்சர் ராஜ்மோகனை சந்தித்துப் பேசினர். அப்போது 'டெட்' தேர்வு தொடர்பான மனுவை அளித்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது: இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முன் பணியில் சேர்ந்தோருக்கு டெட் தேர்வில் இருந்து உச்ச நீதிமன்றம் விலக்கு அளிக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.

ஆனால் அனைத்து ஆசிரியர்களுக்கும் டெட் தேர்ச்சி கட்டாயம் என தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனால் ஜூலையில் நடைபெற உள்ள டெட் தேர்வுக்கு ஆசிரியர்கள் எவ்வித தயாரிப்பும் செய்யவில்லை.


எனவே, ஜூலையில் நடத்தப்பட இருக்கிற சிறப்பு டெட் தேர்வை ஒரு மாதம் தள்ளிவைக்க வேண்டும். கட்டாய கல்வி உரிமைச் சட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முன் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இரண்டாண்டு பணிக்காலத்துக்கு ஒரு மதிப்பெண் என்று கணக்கிட்டு அந்த மதிப்பெண் அவர்களின் டெட் தேர்வு மதிப்பெண்ணுடன் சேர்த்து தேர்ச்சி அறிவிக்க வேண்டும்.

தற்போது உச்ச நீதிமன்றம் டெட் தேர்ச்சி பெறுவதற்கு 2028 வரை அவகாசம் வழங்கியிருப்பதால் பள்ளிக்கல்வித் துறை பட்டதாரி ஆசிரியர்களின் முன்னுரிமை பட்டியலை விரைவாக தயாரித்து அவர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும்.

## பாடாலூரில்...

# ஜல் ஜீவன் திட்டத்துக்கு மூடுவிழா!

## மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பாரா?



பெரம்பலூர், ஜூன்.18-

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரிய ஊராட்சிகளில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாடாலூர் ஊராட்சியும் ஒன்று. பாடாலூர் ஊராட்சியில் மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டம் ஆரம்பித்து, கிட்டதட்ட இரண்டு வருடங்கள் நிறைவடைந்து விட்டது. அதே போல திட்டப் பணிகள் 90 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது.

அதாவது, இதுவரை சுமார் 1100 வீட்டுக்கு குடிநீர் பைப்புகள் போடப்பட்டுள்ளது. இன்னும் 200 முதல் 300 பைப்புகள் போடாமல் வேலை கிடப்பில் உள்ளது.

அதுவும், ஜல் ஜீவன் திட்ட ஒப்பந்ததாருக்கு இதுவரை பில் வராததால் வேலை கிடப்பில் உள்ளதாக கூறப்படுகிறது. ஜல் ஜீவன் திட்டத்தில் பைப்லைன் போடப்பட்ட மணியாங்குறிச்சி ரோடு, ஊத்தங்கால், சீதேவிமங்கலம் ரோடு, இந்திரா நகரின் ஒரு பகுதி ஆகிய ஊராட்சியின் புறபகுதிக்கு அவ்வப்போது குடிநீர் வினியோகிக்கப்படுகிறதே தவிர, ஊராட்சியின் வடக்குதெரு, கடைவீதி, அரசமரத்தெரு, ரைஉலீமில் தெரு, நடுத்தெரு ஆகிய பகுதிகளுக்கு ஜல் ஜீவன் திட்ட பைப்லைன் மூலம்



குடிநீர் விநியோகம் இல்லாமல் பைப்புகள் உடைந்து சேதமாகி ஆங்காங்கே காணப்படுகிறது.

இந்த பகுதிகளில் பைப் போட்டதிலிருந்து இதுவரை 6, 7 நாள் மட்டுமே பெயரளவில் குடிநீர் வந்திருக்கும் என்கிறார்கள் பொதுமக்கள்.

பாடாலூர் ஊராட்சிக்கு குடிநீர் விநியோகத்திற்கு 6 கிணறுகள் இருந்த போதிலும், தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுவதில்லை. வாரத்திற்கு ஒருமுறையோ, இரண்டு முறையோ தான் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாக பொதுமக்கள் கூறுகிறார்கள். வீட்டுக்கு வீடு எதுக்கு பைப் போட்டீங்க, ஏன் தண்ணி விடல என்று ஊராட்சி செயலாளரிடம் பொதுமக்கள் கேட்டபோது, நான் சொல்லிட்டேன். டேங்க் ஆப்ரேட்டர் கேக்கல என்று கூறுகிறாராம்.

பெரிய ஊராட்சியான பாடாலூரில் குடிநீர் தேவைக்கு போதுமானதாக இருந்தும் பொதுமக்களுக்கு விநியோகிக்காமல் இருந்து வருகிறது.

சமூக ஆர்வலர்கள் இதுபற்றி ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம், மண்டல துணை வட்டார வளர்சி அலுவலரிடம் கூறியும் இதுவரை எந்த பலனும் இல்லை.

எனவே, பாடாலூர் ஊராட்சியில் சீரான குடிநீர் வழங்கிடவும், ஜல் ஜீவன் திட்ட பைப்லைன் சேதமாகி இருப்பதை சரிசெய்து அதனை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஏற்றுமதியில் ஏற்பட்ட கடும் சரிவு

# மாம்பழம் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை




திண்டுக்கல், ஜூன்.18-
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் 1 கிலோ மாம்பழத்தின் விலை ரூ5க்கும் கீழ் வீழ்ச்சி அடைந்து உள்ளதால், மாம்பழங்களை குப்பையில் கொட்டும் அவல நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்து உள்ளனர்.
தமிழ்நாட்டில் சேலத்திற்கு அடுத்தபடியாக திண்டுக்கல் மாவட்டத்தின் அல்போன்சா, பங்கனபல்லி, கிரேப் செந்தூரா, இமாம் பசன், மல்கோவா உள்ளிட்ட மாம்பழ ரகங்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நிலையில் நத்தம் சுற்றுவட்டார பகுதிகளான சாணார்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் மா சாகுபடி செய்யப்பட்டு, அறுவடை நடைபெற்று வருகிறது.
இந்த ஆண்டு அமோக விளைச்சல் நடைபெற்றுள்ள நிலையில், மேற்காசிய போர் சூழல் காரணமாக சர்வதேச சந்தையில் மாம்பழ ஏற்றுமதி கடும் சரிவை சந்தித்து உள்ளது. ஏற்றுமதியாளர்கள் கொள்முதல் செய்யாததால் மாம்பழ விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து குப்பையில் கொட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு மாம்பழ விலை கிலோ 10 முதல் 20 ரூபாய் வரை விற்கப்பட்ட நிலையில், தற்போது ரூ.5க்கும் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மாங்கூழ் தயாரிப்பு நிறுவனங்களை ஏற்படுத்தி, வீணாகும் மாம்பழங்களை மதிப்பு கூட்டு பொருளாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது

# அரசு உதவி பெறும் பள்ளிகளில் கூடுதல் கட்டணம் வசூலை தடுக்கக் கோரிய வழக்கு

## அரசு பதிலளிக்க உத்தரவு



மதுரை, ஜூன்.18-
அரசு உதவி பெறும் பள்ளிகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதை தடுக்க வழிகாட்டுதல்களை உருவாக்கக் கோரிய வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டுள்ளது.
தேனி மாவட்டம் உத்தமபாளையத்தைச் சேர்ந்த மைக்கேல் தங்கராஜ் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், “தமிழக அரசு 2008ல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்களிடம் சிறப்பு கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இருப்பினும் பல பள்ளிகளில் மாணவர்களிடம் இருந்து அனுமதியற்ற வகையில் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.
அரசாணைக்கு முரணாக வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக விசாரணை நடத்தவும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் அரசின் விதிமுறைகள் மற்றும் அரசாணைகளுக்கு மாறாக எந்த கட்டணமும் வசூலிக்கப்படாது என்பதை உறுதி செய்ய தேவையான வழிகாட்டுதல்களை உருவாக்க உத்தரவிட வேண்டும்,” என்று மனுவில் கூறியிருந்தார்.
இந்த மனு நீதிபதிகள் சதீஷ் குமார், ஜோதி ராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் கோரிக்கைகளை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், “அரசாணை வெளியீட்டும், எவ்வாறு சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது?” என கேள்வி எழுப்பி, இது தொடபாக தமிழக பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலர், இயக்குனர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# ஸ்ரீ பெரும்புதூர் அருகே பரபரப்பு காஸ் சிலிண்டர்கள் வெடித்து 7 பேர் படுகாயம்

## போலீசார் விசாரணை



ஸ்ரீ பெரும்புதூர், ஜூன்.18-
ஸ்ரீ பெரும்புதூர் அருகே வீட்டில் காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறியதில் 7 பேர் படுகாயம் அடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.
ஸ்ரீ பெரும்புதூர் அருகே தத்தனூர் பகுதியைச் சேர்ந்தவர் முருகன்(35), இவரது மனைவி நந்தினி. இவர்கள் குடும்பத்துடன் கீழ்தளத்தில் குடியிருந்து வரும் நிலையில், மேல் தளத்தில் புதிதாக மேலும் ஒரு வீட்டை கட்டிவந்தனர். கட்டுமான பணிகள் முடிவடைந்த நிலையில், வயரிங் பணிகள் நடைபெற்று வருகிறது.
இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீரென மேல் தளத்தில் புதிதாக கட்டி வந்த வீட்டில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மேல் மாடியில் இருந்து பரவிய தீ, இவர்கள் குடியிருந்து வந்த கீழ் தளத்திற்கும் பரவத் தொடங்கியது. இதனை அறிந்த முருகன், நந்தினி, மாமியார் மற்றும் 2 பிள்ளைகளுடன் பின்பக்க கதவு வழியாக வீட்டை விட்டு வெளியேறினர். தொடர்ந்து விபத்து குறித்து ஒரகடம் போலீசருக்கும், ஸ்ரீ பெரும்புதூர் தீயணைப்பு நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தனர். தீயணைப்புத் துறையினர், சம்பவ இடத்திற்கு வருவதற்குள் தீ கொழுந்து விட்டு எரிந்தது. அருகில் குடியிருந்து வந்தவர்கள், முருகனின் நண்பர்கள் என 5க்கும் மேற்பட்டோர் தண்ணீரை ஊற்றி தீயை அணைக்க முயற்சி செய்துள்ளனர்.
அப்போது, வீட்டில் இருந்த 2 காஸ் சிலிண்டர்கள் அடுத்தடுத்து பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் தீயை அணைக்க வந்த வடகால் பகுதியை சேர்ந்த புருஷோத்தமன், தத்தனூரை சேர்ந்த சைமன், விக்னேஷ், சரத், செல்வராஜ், திலகர், சிரஞ்சீவி உள்ளிட்டோர் படுகாயமடைந்தனர். சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு வீரர்கள், தண்ணீரை பீச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்து அணைத்தனர். விபத்தில் காயமடைந்தவர்கள் 2 பேர், ஸ்ரீ பெரும்புதூர் அரசு மருத்துவமனையிலும், 5 பேர் தண்டலம் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிரஞ்சீவிக்கு 60 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டுள்ளதாக போலீசார் தெரிவிக்கின்றன. விபத்து குறித்து ஒரகடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். காஸ் சிலிண்டர்கள் வெடித்து 7 பேர் படுகாயமடைந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது

# ”பழைய செய்தியையும் பொய் வதந்தியையும் பரப்பினால் ஜெயில்!” எக்ஸ் (X) தளப் பதிவுக்குத் திருப்பூர் காவல்துறை எச்சரிக்கை!

திருப்பூர், ஜூன்.18-
திருப்பூர் மாநகராட்சிப் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளைத் திருப்பூர் மாநகராட்சியால் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் கொட்டுவதாகக் கடந்த சில மாதங்களாகப் பொதுமக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தனர். இச்சூழ்நிலையில், கடந்த 16.12.2025 அன்று திருப்பூர் மாநகர காவல் எல்லைக்குட்பட்ட இடுவாய் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சின்னியம்பாளையம் பகுதியில் லாரிகள் மூலம் குப்பைகளைக் கொண்டு சென்று கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டதால், சாலை மறியலைத் தடுக்க முயன்ற காவல்துறையினருக்குக் காயம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் இருந்த திருப்பூர் மாநகர காவல்துறையினர், மறியலில் ஈடுபட்டவர்களைப் பேருந்துகள் மூலம் அப்புறப்படுத்தித் தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இது குறித்து திருப்பூர் மாநகரம் மங்கலம் காவல் நிலையத்தில் குற்ற எண்: 579/2025 ன்படி பிஎன்எஸ் மற்றும் பல்வேறு சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அன்று மாலையே அனைவரும் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.*வலைத்தள வதந்தியும் காவல்துறையின் மறுப்பும்:*
இச்சூழ்நிலையில், செய்தித் தொலைக்காட்சிகளில் வெளியான இந்த பழைய காவல் துறை நடவடிக்கையை, தற்போதைய நிகழ்வு போலத் தவறாகத் சித்தரித்து கடந்த 15.06.2026 அன்று எக்ஸ் (X) சமூக வலைத்தளப் பக்கத்தில் வதந்தி பரப்பப்பட்டுள்ளது. 'ஷிவீஸ்ணீஸீ' என்பவரது எக்ஸ் தளப் பக்கத்தில், "ஐந்து பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட அதே நாளில் தன்னுடன் நடித்த நடிகர்களுடன் சந்தித்து புகைப்படங்கள் எடுத்து மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறார் தமிழக முதல்வர்" என்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பான வதந்திச் செய்தி பதிவிடப்பட்டுள்ளது.*காவல்துறையின் கறாரான எச்சரிக்கை:*
இந்தச் செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறானதும், திட்டமிட்டப் புனை சுருட்டலுமாகும். சுமார் 06 மாதங்களுக்கு முன்னர் கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்த ஒரு பழைய செய்தியை, இப்போது நடந்த விவகாரத்தோடு தொடர்புபடுத்திப் பொதுமக்களைத் தவறாக வழிநடத்தவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தவும் உள்நோக்கத்தோடு வதந்தி பரப்பப்பட்டுள்ளது. பொதுமக்கள் இதுபோன்ற போலியான, வதந்திச் செய்திகளை நம்பவோ அல்லது பகிரவோ வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. சட்ட ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் செய்திகளைத் திரித்துப் பரப்புபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் திருப்பூர் மாவட்டக் காவல்துறை எச்சரித்துள்ளது.

# புதுச்சேரியில் 42 நாட்களுக்கு பிறகு அமைச்சரவை விரிவாக்கம்: 3 அமைச்சர்கள் பதவியேற்பு



புதுச்சேரி, ஜூன்.18-
புதுச்சேரி அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டு 3 புதிய அமைச்சர்கள் பழைய ராஜ்நிவாஸில் பதவியேற்றனர். விரைவில் அமைச்சர்களுக்கு இலாக்காக்கள் ஒதுக்கப்படும் என்று முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், புதுச்சேரியில் மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்திருக்கிறது. இதையடுத்து கடந்த மாதம் 13ம் தேதி முதல்வராக ரங்கசாமி, அமைச்சர்களாக பாஜகவைச் சேர்ந்த நமச்சிவாயம், என்ஆர். காங்கிரஸை சேர்ந்த மல்லாடி கிருஷ்ணாராவ் ஆகியோர் பதவியேற்றனர். இதைத்தொடர்ந்து கடந்த மாதம் 18ம் தேதி தற்காலிக பேரவைத் தலைவராக அன்பழகன் பதவியேற்றார். 20ம் தேதி அனைத்து எம்எல்ஏக்களும் சட்டப்பேரவையில் பதவியேற்று கொண்டனர். இதன்பின் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்படாமல் இருந்து வந்தது.கடந்த 3ம் தேதி பாஜகவைச் சேர்ந்த ஜி.என்.எஸ்.ராஜசேகர், என்.ஆர்.காங்கிரஸை சேர்ந்த சிவக்கொழுந்து, ராஜவேலு ஆகியோரை அமைச்சர்களாக பரிந்துரை செய்து அதற்கான கோப்பை துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனிடம் முதல்வர் ரங்கசாமி வழங்கினார். இந்த கோப்பு மத்திய உள்துறை மூலம் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. கடந்த 8ம் தேதி குடியரசுத் தலைவர் இதற்கு ஒப்புதல் அளித்தார். இதையடுத்து பாரதி பூங்கா அருகே உள்ள பழைய துணைநிலை ஆளுநர் மாளிகையில் இன்று (ஜூன் 17) காலை 3 அமைச்சர்களின் பதவியேற்பு விழா நடந்தது. தேர்தல் முடிவுகள் வெளியாகி 42 நாட்களுக்கு பிறகு இந்த அமைச்சரவை விரிவாக்கம் நடந்துள்ளது.துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். தொடர்ந்து சட்டப்பேரவை வந்து அமைச்சர்கள் தங்கள்ண அறைகளில் பொறுப்பேற்றனர். முதல்வர் ரங்கசாமி, அமைச்ச ர்கள், எம்எல்ஏக்கள் பங்கேற்றனர். ஏற்கெனவே பதவியேற்ற 2 அமைச்சர்களுக்கு இதுவரை இலாகா ஒதுக்கப் படவில்லை. அனைத்து இலாகாக்களையும் முதல்வர் கவனித்து வருகிறார்.பதவியேற்பு நிகழ்வைத் தொடர்ந்து அமைச்சர்கள் சட்டப்பேரவைக்கு வந்தனர். அவர்களை இருக்கையில் அமர வைத்தபின்பு புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், “புதுச்சேரியில் அமைச்சரவை விரிவாக்கம் நடந்தது. அனைத்து அமைச்சர்களும் பொறுப்பேற்று செயல்படவுள்ளனர். நல்ல முறையில் இந்த அமைச்சரவை முழுமையாக செயல்பட்டு மக்களின் நலன் வளர்ச்சிக்கு பாடுபடுவோம். விரைவில் அமைச்சர்களுக்கு இலாகாக்கள் ஒதுக்கப்படும். பேரவைத்தலைவர் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படும். பேரவைத்தலைவர் பதவி பாஜகவுக்கு தரப்படுமா என்பது அதைக் கொடுக்கும்போது தெரியும்,” என்றார்.


# மதுரையில் கெட்டுப்போன 1,200 கிலோ ஆட்டு இறைச்சி பறிமுதல்

மதுரை, ஜூன்.18-
மதுரை ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் கெட்டுப்போன 1,200 கிலோ ஆட்டு இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டது. ஊசி மூலம் தண்ணீர் நிரப்பி ஆட்டுக்கறி மற்றும் கோழி இறைச்சியை விற்று வந்ததாக எழுந்த புகார் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.மதுரை ஆரப்பாளையம் கிராஸ் ரோடு பகுதியில் மோயிசன் (57) என்பவர், மோயிசன் மட்டன் கடை நடத்தி வருகிறார். இவர் கெட்டுப்போன ஆடு மற்றும் கோழி இறைச்சியை விற்பனை செய்து வருவதாக உணவு பாதுகாப்பு துறைக்கு புகார் வந்துள்ளது. உணவு பாதுகாப்புத் துறை மாவட்ட நியமன அலுவலர் டாக்டர் சிவராம பாண்டியன் தலைமையில் அலுவலர்கள் ஆய்வு செய்தனர்.ஊசி மூலம் தண்ணீர் நிரப்பி ஆட்டுக்கறி மற்றும் கோழி இறைச்சியை விற்று வந்ததாக புகார் தெரிவிக்கப்பட்ட நிலையில், கடையை பூட்டி சீல் வைத்த உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள், ரூ.13,000 அபராதம் விதித்தனர். மேலும் ஊசிகள் பறிமுதல் செய்யப்பட்டு ஆய்வகத்திற்கு அனுப்பட்டதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்

# கும்மிடிப்பூண்டி சென்னை வழித்தடத்தில் ரயில் சேவை பாதிப்பு

திருவள்ளூர், ஜூன்.18-
திருவள்ளூர் மாவட்டம் அத்திப்பட்டு புறநகர் பகுதியில் எண்ணூர் அருகே பினாகினி எக்ஸ்பிரஸ் ரயிலில் மின்சார உபகரணத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, தற்போது கும்மிடிப்பூண்டியில் இருந்து சென்னை நோக்கி செல்லக்கூடிய வழித்தடத்தில் ரயில் சேவை பாதிப்படைந்துள்ளது.
இதனால் கும்மிடிப்பூண்டியில் இருந்து சென்னை நோக்கி வரும் தடத்தில் புறநகர் மின்சார ரயில்கள் அனைத்தும் ஒரே டிராக்கில் அடுத்தடுத்து நிறுத்தப்பட்டு, ரயில் சேவை முடங்கியுள்ளது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ரயில்களில் பயணிகள் சிக்கித் தவித்து வருகின்றனர்.
புறநகர் ரயில்கள் அடுத்தடுத்து நிறுத்தப்பட்டதால் பயணிகள் அவதியடைந்துள்ளனர்.வெளிமாநில ரயில்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. நீண்ட நேரமாக ரயில்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் அருகே உள்ள ரயில் நிலையங்களை நோக்கி பயணிகள் நடந்து செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. அபாயம் அறியாமல் பயணிகள் தண்டபாலத்தை கடந்து வருகின்றனர். இதனிடையே ரயில்வே தொழில்நுட்பக் குழுவினர் ரயிலில் ஏற்பட்டுள்ள கோளாறை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்


# ஜங்க் புட்களுக்குச் சவால் விடும் கே.ஜி குழந்தைகள்! ஆரோக்கிய உணவுப் பழக்கத்தை விதைத்த ஜெயராஜேஷ் பள்ளி! “Eat Your Vegetables Day” கொண்டாட்டம்!



திசையன்விளை, ஜூன்.18-
திசையன்விளையில் உள்ள ஜெயராஜேஷ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி மாணவ, மாணவிகளிடையே சிறுவயதிலேயே ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை உருவாக்கும் உன்னத நோக்கில் "Eat Your Vegetables Day" (காய்கறிகள் உண்ணும் தினம்) மிக உற்சாகமாகக் கொண்டா டப்பட்டது.*மேடையில் அணிவகுத்த குட்டிஸுகள்:*இந்நிகழ்ச்சியில் பள்ளியின் கே.ஜி (KG) பிரிவு மாணவ, மாணவிகள் தக்காளி, கேரட், புரோக்கோலி உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளின் வடிவங்களில் அழகிய வேடமணிந்து மேடையில் அணிவகுத்து வந்தனர். தங்களின் மழலை மொழியில் அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் உடலுக்குக் கிடைக்கும் சத்துக்கள் குறித்தும் எடுத்துரைத்து அங்கிருந்தோரை வியப்பில் ஆழ்த்தினர்.*பகிர்ந்துண்ணும் பண்பும் கலைநிகழ்ச்சிகளும்:*
மேலும், மாணவர்கள் தாங்கள் வீடுகளில் இருந்து கொண்டு வந்திருந்த பச்சைக் காய்கறிகளைத் தங்களின் சக மாணவர்களுடன் அன்போடு பகிர்ந்து கொண்டு, ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தின் அவசியத்தை வெளிப்படுத்தினர். நிகழ்ச்சியின் இறுதிப் பகுதியில், மாணவர்கள் அனைவரும் இணைந்து காய்கறிகளின் நன்மைகளை விளக்கும் வகையிலான வண்ணமயமான கலைநிகழ்ச்சிகள் மற்றும் நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்று விழாவை மகிழ்ச்சிகரமாக நிறைவு செய்தனர்.*ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பும் பாராட்டும்:* இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தும் பொருட்டு, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத் தினர் முழு ஒத்துழைப்புடன் செயல்பட்டு மாணவர்களைத் தொடர்ந்து உற்சாகப்படுத்தினர். குறிப்பாக, பல்வேறு வகையான காய்கறிகளைக் காட்சிப்படுத்தும் வகையில் அழகிய முறையில் அரங்குகளைத் தயார் செய்து, நிகழ்ச்சியை நேர்த்தியாக ஒருங்கிணைத்திருந்தனர். சிறுவயதிலேயே குழந்தைகளின் மனதில் நற்பண்புகளையும் ஆரோக்கியத்தையும் விதைக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த உன்னத நிகழ்ச்சி, பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.*சக்கர வியூகம் வாய்ஸ்:*
இன்றைய நவீனக் காலகட்டத்தில், நாகரிக மோகம் என்ற பெயரில் பீட்சா, பர்கர் மற்றும் பதப்படுத்தப்பட்ட பாக்கெட் உணவுகளுக்கு அடிமையாகி, தங்களின் உடல் ஆரோக்கியத்தைத் தாங்களாகவே கெடுத்துக் கொள்ளும் இளைய தலைமுறை பெருகி வருவது வேதனை க்குரிய விஷயமாகும். இத்தகையச் சூழலில், பள்ளி நிர்வாகமும் ஆசிரியர்களும் முன்வந்து, பச்சைக் குழந்தைகளான கே.ஜி மாணவர்களின் மனதில் "Eat Your Vegetables Day" மூலம் இயற்கையான காய்கறிகளின் முக்கியத்துவத்தை விதைத்திருப்பது மிக அவசியமான, ஆக்கப்பூர்வமான ஒரு சமூகப் பணியாகும். "காய்கறிகளை நேசிப்போம்... ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவோம்" என்ற மாணவர்களின் இந்த முழக்கம் வெறும் ஒருநாள் பள்ளி நிகழ்வோடு நின்றுவிடக் கூடாது. பள்ளிகளில் காட்டப்படும் இந்த விழிப்புணர்வைப் பெற்றோர்களும் தங்களின் வீடுகளில் தொடர்ந்து கடைப்பிடித்து, குழந்தைகளுக்குக் காய்கறிகளைச் சமைத்துக் கொடுத்துப் பழக்க வேண்டும். கல்வி நிறுவனங்களும், பெற்றோர்களும் இணையும் போதுதான் ஆரோக்கியமான, நோய் நொடிகள் அற்ற அறிவியல் பூர்வமான சமுதாயத்தை நம்மால் எதிர்காலத்தில் கட்டமைக்க முடியும்.

# ஸ்பேஸ் எக்ஸ் ஊழியருக்கு வழங்கிய பங்கு மூலம் வெல்டருக்கு கிடைத்தது ரூ.10 கோடி லாபம்





புளோரிடா, ஜூன்.18-
ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் சமீபத்தில் ஐபிஓ வெளியிட்டது. இதன்மூலம் (ஐபிஓ), அந்நிறுவனத்தில் முன்பு வெல்டராக பணியாற்றியவரின் பங்கு மதிப்பு ரூ.10 கோடியாக உயர்ந்துள்ளது.தொழிலதிபர் எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தில், ஜுவான் ஹெர்னாண்டஸ் என்பவர் கடந்த 2015ம் ஆண்டில் வெல்டராக பணியில் சேர்ந்தார். பின்பு ராக்கெட் ஏவுதள உள்கட்டமைப்புகளை உருவாக்குவதில் உதவியாளராக பணியாற்றினார். பின்பு மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெற்றார்.அப்போது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தனது ஊழியர்களுக்கு நிறுவன பங்குகளை வழங்குவதை வழக்கமாக கொண்டிருந்தது. அதை அப்போது ஜுவான் ஹெர்னாண்டஸ் பெரிய விஷயமாக கருதவில்லை. ஏனென்றால், அவர் முன்பு பணியாற்றிய நிறுவனங்களில் ஊழியர்களுக்கு இது போல் பங்குகள் வழங்குவது வழக்கம் இல்லை.ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றிய ஹெர்னாண்டஸ், சுமார் 6,500 ஸ்பேஸ் எக்ஸ் பங்குகளை வைத்திருந்தார். ஜுவான் ஹெர்னாண்டஸ் தற்போது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தில் இருந்து வெளியேறி புளூ ஆரிஜின் நிறுவனத்தில் பணியாற்றுகிறார்.

இந்நிலையில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தனது 7.13 லட்சம் கோடி பங்குகளை நாஸ்டாக் பங்குச் சந்தையில்(ஐபிஓ) பட்டியலிட்டது. முதல் நாளில் ஒரு பங்கு விலை 160.95 டாலராக உயர்ந்தது. இதன் மூலம் ஜுவான் ஹெர்னாண்டஸ் பங்குகளின் மொத்த மதிப்பு 1 மில்லியன் டாலருக்கு (ரூ.9.95 கோடி) உயர்ந்துள்ளதால் அவர் கோடீஸ்வரராக மாறியுள்ளார்.

# ஒருங்கிணைந்து திரண்ட நல்லாறு பாதுகாப்பு இயக்கம்!ட்ரோன் மூலம் விறுவிறுப்பாகத் தொடங்கிய இரண்டாம் கட்டப் பணிகள்!



திருப்பூர், ஜூன்.18-
நல்லாற்றை மீட்டெடுக்கும் உயரிய நோக்கில், ஆற்றின் முழுப் பாதையையும் துல்லியமாகத் திட்டமிடுவதற்கான "இரண்டாம் கட்ட ட்ரோன் ஆய்வுப் பணிகள்" தொடங்கப் பட்டுள்ளன.துல்லியமான டிஜிட்டல் மேப்பிங் பணிகள்: நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் (கிரீன் ஆர்மி) உன்னத முயற்சியால், ஆற்றின் தற்போதைய நிலை, நீரோட்டப் பாதைகள் மற்றும் ஆக்கிரமிப்புப் பகுதிகள் ஆகியவற்றைத் துல்லியமாகக் கண்டறியும் வகையில் இந்த ட்ரோன் ஆய்வுப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. ஆற்றின் ஒட்டுமொத்தப் பாதையையும் நவீனத் தொழில்நுட்பத்தின் மூலம் 'டிஜிட்டல் மேப்பிங்' செய்து, அதன் மூலம் ஆற்றின் இயற்கை அமைப்பை முழுமையாக மீட்டெடுப்பதற்கான ஆக்கப்பூர்வமான திட்ட வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இயக்க உறுப்பினர்கள் கள ஆய்வு:கடந்த 15.06.2026 அன்று நடைபெற்ற இந்த இரண்டாம் கட்டத் தொடக்க நிகழ்வின் போது, நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் கிரீன் ஆர்மி முக்கிய நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலர் நேரடியாகக் களத்தில் திரண்டு நின்று, ஆய்வுப் பணிகளை ஒருங்கிணைத்துத் தொடங்கி வைத்தனர்.

நம் சமுதாயத்தின் வாழ்வாதாரமான நதிகள் காக்கப்பட வேண்டும் என்பது வெறும் முழக்கம் மட்டுமல்ல, அது நம் ஒவ்வொருவரின் அத்தியாவசியக் கடமையாகும். இந்த உன்னத நோக்கத்தை அறிவியல் பூர்வமாகவும் ஆக்கப்பூர்வமாகவும் கையில் எடுத்து, நல்லாற்றை மீட்க ட்ரோன் மூலம் இரண்டாம் கட்ட டிஜிட்டல் மேப்பிங் பணிகளைத் தொடங்கியுள்ள நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் (கிரீன் ஆர்மி) அனைத்து உறுப்பினர்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் அப்பகுதி வாழ் மக்கள் அனைவரும் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

தற்காலக் கார்ப்பரேட் ஆக்கிரமிப்புகளாலும், முறையற்ற கழிவுநீர்க் கலப்பாலும் சுருங்கி வரும் நல்லாற்றை மீட்டெடுக்க இதுபோன்ற நவீனத் தொழில்நுட்ப ஆய்வுகள் மிக அவசியமானவை. எனினும், இந்த ட்ரோன் ஆய்வின் மூலம் திரட்டப்படும் டிஜிட்டல் தரவுகளையும், ஆக்கிரமிப்புப் புள்ளிவிவரங்களையும் மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்து, சட்ட நடவடிக்கை எடுப்பதை இந்த இயக்கம் தொடர்ந்து கண்காணித்து உறுதி செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# "உதவிப் பேராசிரியர் பணியிடங்களை 4 ஆயிரமாக அதிகரிக்க வேண்டும்" நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூன்.18-
உதவிப் பேராசியர் பணியிடங்களுக்கு கடந்த டிசம்பர் மாதம் நடத்திய தகுதித் தேர்வுக்கான பணியிடங்களை 4,000ஆக அதிகரிக்க வேண்டும் என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 2,708 உதவிப் பேராசியர் பணியிடங்களுக்கு கடந்தாண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற தகுதித் தேர்வுக்கான முடிவுகளை ஜூன் மாத இறுதியில் ஆசிரியர் தகுதி வாரியம் வெளியிடவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு தடையாக இருந்த கவுரவ விரிவுரையாளர்கள் தொடர்பான வழக்கை கடந்த மே மாதமே சென்னை உயர் நீதிமன்றம் முடித்து வைத்த நிலையில், ஏற்கனவே அறிவித்த 2,708 உதவிப் பேராசியர் பணியிடங்களுடன் மேலும் காலியாக உள்ள 1,292 பணியிடங்களையும் சேர்த்து, 4,000 காலிப் பணியிடங்களாக உயர்த்தி, உதவிப்பேராசிரியர் தகுதித் தேர்வுக்கான முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

இதனால், பேராசிரியராகும் கனவோடு காத்திருக்கும் ஆயிரக்கணக்கான தேர்வர்களுக்கும் பயனளிக்கும். காலிப் பணியிடங்களும் விரைவில் நிரப்பப்பட்டு அரசுக் கல்லூரி மாணவர்களுக்கும் பயனளிக்கும்.

எனவே, தமிழக உயர்க்கல்வியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, டிசம்பர் மாதம் நடத்திய தகுதித் தேர்வுக்கான பணியிடங்களை 4,000ஆக அதிகரிக்க வேண்டும் என முதல்வர் விஜய்யை வலியுறுத்துகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

# கோவில் வளாகத்தில் செயல்படும் கடைகளில் பூஜை பொருள் விலைப்பட்டியல் கட்டாயம்: அமைச்சர் ரமேஷ் உத்தரவு

சென்னை, ஜூன்.18-
இந்து சமய அறநிலைத்துறைக்கு உட்பட்ட கோவில் வளாகத்தில் இருக்கக்கூடிய பூஜை பொருள் கடைகளில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்துதல் கட்டாயம் என்று இந்து அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் உத்தரவிட்டுள்ளார்.

கோவில்களின் வளாகங்களில் இயங்கும் கடைகளில் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பூஜை பொருள்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் பூஜைக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களை தரமான பொருட்களாகவே வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட எம்.ஆர்.பி. விலையைவிட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யக் கூடாது. அதை தாண்டி அதிகமான விலைக்கு பொருட்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இந்து அறநிலையத் துறை தரப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கோவிலுக்கு வெளியே வழித்தடங்களை ஆக்கிரமித்து கடைகள் அமைத்து பூஜைப் பொருள்களை விற்பனை செய்யக் கூடாது. கடைகள் சுற்றியும் குப்பைகள் இல்லாமல் தூய்மையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறநிலையத் துறை தரப்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.பிளாஸ்டிக் பைகளில் பூஜைப் பொருள்களை அடைத்து விற்பனை செய்யக் கூடாது. மஞ்சள் துணிப் பையை மட்டுமே பொருள்களை வழங்க வேண்டும் என்றும் பக்தர்கள் கேட்காத பொருட்களை வாங்கச் சொல்லி கடைக்காரர்கள் வற்புறுத்தக்கூடாது உள்ளிட்ட பல்வேறு விதிமுறைகளுடைய சுற்றறிக்கை அனைத்து இந்து சமய அறநிலைத்துறைக்கு கோவில்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது

# சிறுவாபுரி முருகன் கோயிலில் குவிந்த பக்தர்கள் கூட்டம்: 2 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம்

பெரியபாளையம், ஜூன்.18-
சிறுவாபுரி முருகன் திருக்கோயிலில் செவ்வாய்க்கிழமை என்பதால் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. சுமார் 2 மணி பக்தர்கள் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் அமைந்துள்ளது. தொடர்ச்சியாக 6 வாரங்கள் இங்கு வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வேண்டுதல் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. அதிலும் முருகனுக்கு உகந்த செவ்வாய்க்கிழமை நாட்களில் சிறுவாபுரி கோயிலில் பக்தர்கள் அதிகளவில் வந்து செல்வது வழக்கம். அதன்படி, செவ்வாய்க்கிழமையான நேற்று சிறுவாபுரி முருகன் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

திருவள்ளூர் மாவட்டம் மட்டுமல்லாது சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து ஏராளமானோர் சாமி தரிசனம் செய்ய வந்தனர். பொது தரிசனம், 50 ரூபாய் மற்றும் 100 ரூபாய் கட்டண தரிசனம் என அனைத்து வரிசைகளிலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. கோயிலுக்கு வெளியே நீண்ட வரிசையில் வந்து காத்திருப்பு மண்டபம் வழியே கோயிலுக்குள் வந்து சுமார் 2 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். புதிய வீடு கட்ட வேண்டும், திருமண தடை நீங்க வேண்டும், அரசியல், ரியல் எஸ்டேட் தொழில் என பல்வேறு வேண்டுதல் நிறைவேறுவதற்காக ஆலயத்தின் பின்புறம் உள்ள வேப்பமரத்தடியில் நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தும், செங்கற்களை அடுக்கி வைத்தும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர்

# ஆனைமலை புலிகள் காப்பக விடுதிகளில் கேம்ப் ஃபயருக்கு ஐகோர்ட் தடை

மதுரை, ஜூன்.18-
ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உள்ள தனியார் விடுதிகளில் கேம்ப் ஃபயர், இசை நிகழ்ச்சி நடத்த தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடைக்கானலை சேர்ந்த பாலகிருஷ்ணன், செல்வ கணபதி உள்ளிட்ட 5 பேர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: "ஆனைமலை புலிகள் காப்பக இடையக பகுதி விரிவுப்படுத்தப்பட்டு கொடைக்கானல் மற்றும் திண்டுக்கல் வனப் பிரிவுகளின் சில பகுதிகளும் இணைக்கப்பட்டன. இந்த எல்லை பூண்டி கிராமத்தில் தொடங்கி மன்னவனூர், கூக்கால் ஆகிய கிராமங்கள் வழியாக ஆண்டிப்பட்டி வரை செல்கிறது.

தேசிய வனவிலங்கு வாரியத்தில் முன் அனுமதி இல்லாமல் இந்த பகுதியில் விடுதிகள், ஹோட்டல்கள், பூங்காக்கள் போன்றவை கட்டப்படக்கூடாது. ஆனால் கொடைக்கானலில் முறையான அனுமதி இல்லாமல் அங்கீகாரம் அற்ற வணிக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

எனவே மன்னவனூர் கிராம ஆனைமலை புலிகள் காப்பகத்தின் இடையகப் பகுதியில் எவ்வித வணிக கட்டிடங்களுக்கும் அனுமதி வழங்க தடை விதிப்பதோடு, மன்னவனூர் கிராமத்தில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வணிக கட்டிடங்களை அகற்றவும், அதன் இயல்பான நிலைக்கு மீட்டெடுக்கவும் உத்தரவிட வேண்டும்," என மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில், வணிக ரீதியான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால் ஒவ்வொரு நாளும் 'கேம்ப் பயர்' அமைக்கப்பட்டு இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்த கட்டுமானங்கள் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

அவற்றை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கு தொடர்பாக தமிழக வனத்துறை முதன்மைச் செயலர், ஆனைமலை புலிகள் காப்பக தலைமை வன பாதுகாவலர் பதில் மனு தாக்கல் செய்யவும், தனியார் விடுதிகளில் எவ்விதமான கேம்ப் ஃபயர் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தக்கூடாது என்றும் உத்தரவிட்டு, வழக்கை வனம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அமர்வுக்கு மாற்றி ஒத்திவைத்தனர்.

# போலீஸ் விசாரணையில் உயிரிழந்த ஆகாஷ் உடல் 100 நாட்களுக்கு பின்னர் அரசு சார்பில் தகனம்

மதுரை, ஜூன்.18-
மானாமதுரையில் போலீஸார் விசாரணையில் உயிரிழந்த ஆகாஷ் உடல், 100 நாட்களுக்குப் பின்னர் அரசு சார்பில் தகனம் செய்யப்பட்டது. இதற்காக, மதுரை அரசு மருத்துவமனையின் பிணவறையில் இருந்து ஆகாஷ் உடலை எடுத்துவந்தபோது, போலீஸாருக்கும் ஆகாஷ் உறவினர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீஸுடன் மோதியதற்காக 50 பேர் கைது செய்யப்பட்டனர். சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்தவர் ஆகாஷ் டெலிசன் (24). அப்பகுதியைச் சேர்ந்த 2 பேரை வெட்டிய வழக்கில், போலீஸார் அவரை கைது செய்தனர். பின்னர் அவரை போலீஸார் தாக்கியதில் அவரது கால் எலும்பு முறிந்ததாகக் கூறி மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால், ஆகாஷ் கடந்த மார்ச் 8ம் தேதி உயிரிழந்தார். அவரது உடல் உயர் நீதிமன்ற உத்தரவின்படி உடற்கூராய்வு செய்யப்பட்டது. இந்த சம்பவத்தில் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில், இதில் தொடர்புடைய போலீஸாரை கைது செய்ய வேண்டும், உரிய இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும், அப்போதுதான் ஆகாஷ் உடலை பெற்றுக் கொள்வோம் என அவரது உறவினர்கள் பல கட்டங்களாக போராட்டம் நடத்தினர். இதனால், 100 நாட்களாக அவரின் உடலானது மதுரை அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், ஆகாஷ் உடலை அரசு சார்பில் அடக்கம் அல்லது தகனம் செய்ய தமிழக அரசுக்கு உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது. அதன்படி, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் தலைமையில் பலத்த போலீஸார் பாதுகாப்புடன் ஆகாஷின் உடல் தகனம் செய்வதற்காக அரசு மருத்துவமனையில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டது.

அப்போது அங்கிருந்த ஆகாஷின் உறவினர்கள், உடலை வெளியே கொண்டவருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், அவர்களுக்கம் காவல்துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.இதையடுத்து, எதிர்ப்பு தெரிவித்த சுமார் 50 பேரை போலீஸார் கைது செய்தனர். பின்னர், ஆகாஷின் உறவினர்கள் முன்னிலையில், மதுரை தத்தனேரி மின் மயானத்தில் ஆகாஷின் உடல் தகனம் செய்யப்பட்டது



# திருச்செந்தூர் முருகன் கோயிலில் ஜூலை 1 முதல் செல்போனுக்கு தடை!!

திருச்செந்தூர், ஜூன்.18-
திருச்செந்தூர் முருகன் கோயிலில் ஜூலை 1 முதல் செல்போனுக்கு தடை விதிக்கப்பட்டது. 2022ல் விதிக்கப்பட்ட தடை தீவிரப்படுத்தப்படும் என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஜூலை 1 முதல் உயர்நீதிமன்ற உத்தரவு முழுமையாக அமல்படுத்தப்படும். பக்தர்கள் செல்போனை பாதுகாப்பாக கோயில் பிரத்யேக பாதுகாப்பு மையங்கள் வைத்துவிட்டு கோயிலுக்கு வர வேண்டுகோள் விடுக்கப்பட்டது

# தவெகவின் ஒரு மாத கால ஆட்சியில் மரபுகள், சட்டங்கள் மதிக்கப்படவில்லை: கீதா ஜீவன்



சென்னை, ஜூன்.18-
தவெகவின் ஒரு மாத கால ஆட்சியில் மரபுகள், சட்டங்கள் மதிக்கப்படவில்லை என முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் பேட்டி அளித்துள்ளார். ஒவ்வொரு துறையின் செயல்பாடுகள் அமைச்சர்களுக்கு தெரியவில்லை. ரூ.2,500 உரிமைத் தொகையை மக்கள் கேட்பார்கள் என்பதால் வெள்ளை அறிக்கையை தவெக அரசு வெளியிட்டுள்ளது. மக்களை ஏமாற்றவே வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளது தவெக அரசு. சிங்கப்பெண் படையில் உள்ள காவலரின் நகையே திருடு போகிறது என்று கீதா ஜீவன் குற்றச்சாட்டு சாட்டினார்

# நீட் மறுதேர்வு அச்சத்தால் கோவையில் மாணவி தற்கொலை



கோவை, ஜூன்.18-
நீட் மறுதேர்வு அச்சத்தால் கோவையில் மாணவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பாக போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

கோவை மாநகர எல்லைக்குட்பட்ட கோவைப்புதூரில் உள்ள பாரூக் நகரைச் சேர்ந்தவர் செந்தில்பிரபு. இவர், டாஸ்மாக் கடையில் சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறார். கோவை சி.ஐ.டி.யு. டாஸ்மாக் தொழிற்சங்க பொதுச் செயலாளராகவும் உள்ளார். இவருக்கு மனைவி, இரு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் அனுகீர்த்தனா (19). இவர், பிளஸ் 2 வகுப்பு முடித்துவிட்டு மருத்துவப் படிப்புக்குச் செல்ல, நீட் தேர்வுக்கு தயாராகி வந்தார். இதற்கு முன்பு இரு முறை நீட் தேர்வு எழுதிய மாணவி அனுகீர்த்தனா அதில் தோல்வியடைந்துள்ளார்.

தொடர்ந்து மூன்றாவது முறையாக நடப்பாண்டும் மாணவி அனுகீர்த்தனா நீட் தேர்வு எழுதியுள்ளார். ஆனால், வினாத்தாள் முன்னரே வெளியான விவகாரத்தால், சமீபத்தில் நடத்தப்பட்ட நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. மீண்டும் அடுத்த சில நாட்களில் நீட் தேர்வு நடத்தப்பட உள்ளது.

நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டதால் மாணவி சோகமடைந்தார். நீட் மறுதேர்வு எழுத வேண்டும் என அச்சமடைந்து மனக் குழப்பத்தில் இருந்து வந்ததாக தெரிகிறது. இந்நிலையில், நேற்று (ஜூன் 16) நள்ளிரவு வரை மாணவி அனுகீர்த்தனா நீட் தேர்வுக்காக படித்தார். நள்ளிரவுக்கு பின்னர் உறங்கச் சென்றார்.

இதற்கிடையே, நீட் மறுதேர்வு அச்சத்தால் மன உளைச்சல் அடைந்த மாணவி அனுகீர்த்தனா நேற்று நள்ளிரவு தூங்க செல்லும் முன்னர் தலைவலிக்கு தேய்க்க பயன்படுத்தப்படும் திரவ வடிவிலான தைலத்தை குடித்துள்ளார். பின்னர், அவரது உடலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதைப் பார்த்த அவரது பெற்றோர் மாணவியிடம் விசாரித்துள்ளனர். அதில், தைலத்தை குடித்து தற்கொலைக்கு முயன்றதை தெரிவித்துள்ளார்.இதையடுத்து, குடும்பத்தினர் மாணவி அனுகீர்த்தனாவை மீட்டு ஆவாரம்பாளையத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர், மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு மாணவி மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி மாணவி உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக குனியமுத்தூர் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

தற்கொலை தீர்வல்ல: தற்கொலை என்பது எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு அல்ல. தற்கொலை எண்ணம் தோன்றினால் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக 'சினேகா' தற்கொலை தடுப்பு உதவி எண்: 04424640050, மாநில தற்கொலை தடுப்பு உதவி எண்: 104, ஐகால் (iCall Pychosocial) உதவி எண் 02225521111 ஆகிய எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.



■ தென்காசி மாவட்டம் செங்கோட்டை முத்துச்சாமி பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள சுதந்திரப்போராட்டவீரர் வாஞ்சிநாதன் மணிமண்டபத்தில் 115 ஆவது நினைவு தினத்தினை முன்னிட்டு அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங் இ.ஆ.ப., மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பெ.சா.கருப்பணராஜவேல், செங்கோட்டை நகர்மன்ற தலைவர் ராமலெட்சுமி, ஆணையாளர் (பொ) லெட்சுமி, செயற்பொறியாளர் முகைதீன் அபுபக்கர், சுகாதார ஆய்வாளர் ஈஸ்வரன், வட்டாட்சியர் மாரியப்பன், வாரிசுதாரர்கள் வாஞ்சி கோபாலகிருஷ்ணன், லெட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 200 வீடுகள் கொண்ட நகருக்குக் கழிவுநீர் வடிகால் வசதி இல்லை! கலெக்டர் வரை மனு கொடுத்தும் பலனில்லை! அலட்சியத்தின் உச்சத்தில் அதிகாரிகள்!

ஈரோடு, ஜூன்.18=

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தாலுக்கா, சின்னியம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட முத்துகவுண்டன்பாளையம் பகுதியில் அமைந்துள்ள என்.பி.எஸ். நகரில், கழிவுநீர் வடிகால் வசதி இல்லாததால் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாட வாழ்வாதாரத்தை இழந்து கடுமையான சுகாதாரச் சீர்கேட்டிற்கு ஆளாகி வருகின்றனர்.



*பாறை நிலப்பரப்பும் தேங்கும் கழிவுநீரும்:*இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தங்களின் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரைத் தேக்குவதற்காகத் தங்களின் சொந்தச் செலவில் உறிஞ்சுகுழிகள் அமைத்திருந்தாலும், அந்தப் பகுதி முழுவதும் மலை போன்ற பாறைகள் நிறைந்த நிலப்பரப்பாக உள்ளதால், கழிவுநீர் மண்ணுக்குள் உறிஞ்சப்படாமல் அப்படியே வெளியேறி வருகிறது. இதனால், சுத்திகரிக்கப்படாத சாக்கடை நீர் அனைத்தும் பொதுச் சாலைகளிலும், மண் சாலைகளிலும் ஆறாக ஓடித் தேங்குவதால் ஒட்டுமொத்தப் பகுதியும் துர்நாற்றமடிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

* மழைக்காலக் கொடுமைகளும் அதிகாரிகளின் அலட்சியமும்:*குறிப்பாக மழைக்காலங்களில் நிலைமை மேலும் விபரீதமாக மாறுகிறது. ஒரு வீட்டின் கழிவுநீர் மழைநீருடன் கலந்து அடுத்த வீட்டின் வாசலிலும், பொதுப் பாதைகளிலும் தேங்கி நிற்கிறது. இதனால், அப்பகுதி மக்கள் தங்களின் வீடுகளுக்குச் செல்லும்போது இந்தச் சுகாதாரமற்ற, அசுத்தமான சாக்கடை நீரை மிதித்துக்கொண்டே வீட்டிற்குள் செல்ல வேண்டிய அருவருப்பான சூழல் நிலவுகிறது. இது குறித்துச் சம்பந்தப்பட்ட சின்னியம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலர் (PDO) மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை பலமுறை நேரில் சென்று முறைப்படி மனுக்கள் அளித்தும், இதுவரை எந்தவொரு ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் வேதனையுடன் குற்றம் சாட்டுகின்றனர்.

*சக்கர வியூகம் வாய்ஸ்:* ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் என்றும், உள்ளாட்சி உள்கட்டமைப்பு மேம்பாடுகள் என்றும் மேடைக்கு மேடை முழங்கும் அதிகாரிகள், ஈரோடு மொடக்குறிச்சி என்.பி.எஸ்.நகர் மக்களின் இந்த நியாயமான வாழ்வாதாரப் பிரச்சினையைக் கண்பொத்தி வேடிக்கை பார்ப்பது அப்பட்டமான நிர்வாகத் தோல்வியாகும். 200 வீடுகள் கொண்ட ஒரு மக்கள் குடியிருப்புப் பகுதியில் அடிப்படைத் தேவையான கழிவுநீர் வடிகால் வசதியைக் கூடக் கட்டமைக்காமல், மக்களைச் சாக்கடை நீரை மிதித்து வாழ விடுவது எந்த விதத்தில் நியாயம்? பாறை நிலப்பரப்பு என்று தெரிந்தும் அதற்கு ஏற்ற மாற்று வடிகால் திட்டங்களைச் செயல்படுத்தாமல், பொதுமக்கள் கொடுத்த மனுக்களைக் குப்பைத் தொட்டியில் வீசிய அதிகாரிகள் மீது மாவட்ட நிர்வாகம் கறாரான விசாரணை நடத்த வேண்டும்.ஈரோடு மாவட்ட ஆட்சியர் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, சின்னியம்பாளையம் ஊராட்சியில் போர்க்கால அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து, என்.பி.எஸ். நகர் மக்களுக்குப் புதிய கழிவுநீர் வடிகால் வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டும். மக்களின் பொறுமையை மேலும் சோதிக்காமல், அவர்களின் அடிப்படைச் சுகாதார உரிமையை நிலைநாட்ட அரசு போர்க்கால அடிப்படையில் களமிறங்க வேண்டும் என்பதே என்பிஎஸ் பகுதி வாழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது.



# ராயகிரியில் “உறவுகள் உதவும் கரங்கள்” அறக்கட்டளை சார்பில் நிவாரணப் பொருட்கள் வழங்கல்

புளியங்குடி, ஜூன்.18-

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள ஸ்ரீ கெங்கா பரிமேஸ்வரி அம்மன் கோவிலில், உறவுகள் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில் பொருளாதாரத்தில் நலிவடைந்த ஏழை, எளிய மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வாசுதேவநல்லூர் பகுதியைச் சேர்ந்த வி பி மணி (எ)வெள்ளைச்சாமி, செல்லத்தாய், தலைமை வகித்தார். திருமலைக் குமார் திருமலைக்குமாரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த விழாவில்உறவுகள் உதவும் கரங்கள் அறக்கட்டளை தலைவர் பெத்துராஜ் குட்டியான், அறக்கட்டளையின் சமூக ஆர்வலர் சங்கர் கோமதி, மாவட்ட ரோட்டரி துணை ஆளுநர் சுந்தர்ராஜ், அம்மணி அம்மன் கோவில் தலைவர் கே ராஜகோபால், ஏபிஜே அப்துல் கலாம் அமைப்பு தலைவர் பாக்கியராஜ், ஸ்ரீ கிருஷ்ண ஜவராஜா கோவில் செயலாளர் கங்கையா, சமூக ஆர்வலர் வெள்ளத்துரை, ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். நிகழ்ச்சியில் புளியங்குடி, ராயகிரி, சிந்தாமணி, வாசுதேவநல்லூர், சேத்தூர், தளவாய்புரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அரிசி, பலசரக்கு பொருட்கள், காய்கறிகள், ஜவுளி மற்றும் போர்வைகள் வழங்கப்பட்டன. மேலும் ஏழை, எளியோரின் மருத்துவச் செலவிற்காக நிதி உதவியும் வழங்கப்பட்டது.

# அலங்காநல்லூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம்

அலங்காநல்லூர். ஜூன்.18-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் சமுதாய கூடத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின்செயற்குழு கூட்டம் சோழவந்தான் தொகுதி சார்பில் மாவட்டச் செயலாளர் தமிழாளன்,தலைமையிலும் மாவட்ட அமைப்பாளர் அதிவீரபாண்டியன், முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்கள் மாநில செய்தி தொடர்பாளர் பாவலன், ஆசிரியர் அலங்கை செல்வஅரசு, மாலின், மோகனா, அம்பேத், ஆகியோர் கலந்து கொண்டு பேசியது தலைவர் தொல் திருமாவளவன் அரசு பணியை உதறிவிட்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எண்ணற்ற தியாகங்களை செய்துள்ளார் உலகம் போற்றும் ஒரு ஒப்பற்ற தலைவர் நமது தலைவர் மட்டும்தான் விடுதலை சிறுத்தைகள் கட்சி இல்லை என்றால்



தமிழகத்தில் அரசியல் புரட்சியை கிடையாது எந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கிறோமோ அந்தக் கூட்டணிக்காக உயிரைக் கொடுத்து பாடுபடக்கூடிய தலைவரை பெற்றுள்ளோம். அதற்காக கடுமையாக உழைத்து அந்தக் கூட்டணி வெற்றி கூட்டணியாக அமைய அயராது பாடுபட்டுக் கொண்டு உள்ளோம். நமது கட்சியை தேர்தல் ஆணையம் மாநில கட்சியாக அங்கீகாரம் வழங்கியமைக்கும் அதற்காக இரவு பகலாக கஷ்டப்பட்டு இந்த மக்களுக்காக உழைத்த தலைவர் திருமாவளவனுக்கு முதலில் அனைவரும் நன்றி கடன்பட்டு உள்ளோம். அடுத்தபடியாக தமிழக வெற்றிக்கழக கூட்டணி ஆட்சியில் சமூக நீதித்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள வன்னியரசுக்கு வாழ்த்துக்களை இந்த கூட்டத்தின் வாயிலாக நன்றியை வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வரும் அனைத்து தேர்தலிலும் விடுதலை சிறுத்தைகள் பங்கு சிறப்பாக இருக்கும் என்று கூறினர். இதில்ஒன்றிய நிர்வாகிகள் ஜெயபிரகாஷ், அழகுமலை, திருமாவாசு, கடல்கேசவன்,ராஜாராம், பதினெட்டாம்படி, மகளிரணி காமயி, தமிழ்ச்செல்வி, ஜெயலட்சுமி, சரோஜா, உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# பெருமாள்பட்டி கிராமத்தில் ஸ்ரீ பட்டவன், முனியன், பிச்சாயி , மரத்தி, திருக்கோவில் கும்பாபிஷேக விழா

அலங்காநல்லூர், ஜூன்.18-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெருமாள்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீபட்டவன், ஸ்ரீ முனியன், ஸ்ரீ பிச்சாயி , ஸ்ரீமரத்தி, திருக்கோவில் கும்பாபிஷேக விழா நடந்தது.இரண்டு நாட்கள் நடந்த இந்த யாகசாலை பூஜையில் மங்கல இசை முழங்க மகா கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், தன்வந்திரி யாகம், நவகிரக ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் வேத மந்திரங்கள் முழங்க வானத்தில் கருடன் வட்டமிட கோவிலில் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் தீபாராதனைகள், சிறப்பு அபிஷேகங்கள்,அலங்காரங்கள் நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பூஜை மலர்களும், பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஸ்ரீ யாதவ அய்யன் கருப்பசாமி,ஸ்ரீ பட்டவன் சுவாமி குலதெய்வம் வணங்கும் பங்காளிகள் மற்றும் மாமன் மைத்துனர்கள் செய்திருந்தனர்.



# குறைந்த செலவில் அதிக மகசூல் பெறச் சான்றுபெற்ற விதைகளைப் பயன்படுத்துக!” அலங்காநல்லூரில் விஞ்ஞானிகள்விவசாயிகள் முகாம்!

அலங்காநல்லூர், ஜூன்.18-

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்திற்குட்பட்ட தனிச்சியம் கிராமத்தில் நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் சிறப்பு முகாம் 16.06.2026 அன்று மிக விமரிசையாக நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் சுமார் 100 முன்னோடி நெற்பயிரிடும் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

இயற்கை விவசாயம் மற்றும் மண்வளப் பாதுகாப்பு:இம்முகாமில் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் கலந்துகொண்டு, 'விளைநிலம் பாதுகாப்போம்' இயக்கங்களின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். அவர் தனது உரையில், "சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவிக்க முடியும். மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், சாகுபடிச் செலவைக் குறைத்தல், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளுதல் மற்றும் பசுந்தாள் உரப்பயன்பாடுகளை விவசாயிகள் தங்களின் அன்றாட விவசாயத்தில் கொண்டு வர வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இம்முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் அலங்காநல்லூர் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார். விழாவிற்கான முழு ஏற்பாடுகளையும் அட்மா திட்ட உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் மிக நேர்த்தியாகச் செய்திருந்தனர்.



# புளியங்குடியில் இளைஞர்கள் மற்றும் ஜமாத் கமிட்டி இணைந்து நடத்திய மாபெரும் பாராட்டு விழா! எம்எல்ஏ ராஜா ஊக்க நிதி!

புளியங்குடி, ஜூன்.18-

வாசுதேவநல்லூர் தொகுதியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தொகுதி அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவியை பாராட்டும் விதமாக, இளைஞர்கள் மற்றும் ஜமாத் கமிட்டி இணைந்து நடத்திய மாபெரும் பாராட்டு விழாவில் வாசுதேவநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் த.ராஜா பங்கேற்று வாழ்த்து தெரிவித்தார்.புளியங்குடி பள்ளி வாசல் தெருவைச் சேர்ந்த கூலித் தொழிலாளி முகைதீன் ராஜா என்பவரின் மகள் அம்ரீன் பாத்திமா, புளியங்குடி முகைதீன் ஆண்டவர் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்று, பொதுத்தேர்வில் 492/500 மதிப்பெண்கள் பெற்று அசாத்திய சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் வாசுதேவநல்லூர் தொகுதி அளவில் முதலிடத்தையும், தென்காசி மாவட்ட அளவில் மூன்றாவது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார். மாணவியின் இந்தச் சிறப்பான கல்வி சாதனையைப் பாராட்டும் விதமாக வாசுதேவநல்லூர் தொகுதி எம்எல்ஏ ராஜா, மாணவிக்கு புத்தகங்களை பரிசளித்து, அவரது உயர்கல்விக்காக ஊக்க நிதியையும் வாழ்த்துக்களையும் வழங்கினார்.

கீழப்பள்ளிவாசல் ஜமாத் நடத்திய மாபெரும் பாராட்டு விழா:இதனைத் தொடர்ந்து முகைதீன் ஆண்டவர் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளையும் ஊக்குவிக்கும் விதமாக, கீழப்பள்ளிவாசல் ஜமாத் இளைஞர்கள் மற்றும் ஜமாத் கமிட்டி இணைந்து நடத்திய மாபெரும் பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு நவாஸ்கான் தலைமை வகித்தார், மீராசா ஆலிம் கிறாஅத் ஓதினார், நிஜாம்தீன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். ஹமீது அனைவரையும் வரவேற்றார். கீழப்பள்ளிவாசல் தலைவர் ரிசவுஅப்பா முன்னிலை வகித்தார். மேலப்பள்ளி வாசல் தலைவர் முகைதீன் அப்துல் காதர், துணை தலைவர் அப்துல் ஜப்பார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



# அரக்கோணத்தில் தவெக பேனர் சரிந்து விழுந்ததில் போக்குவரத்து பாதிப்பு!!

அஅரக்கோணம், ஜூன்.18-

ரக்கோணத்தில் பெய்த மழையால் முதலமைச்சர் விஜய் பிறந்தநாள் விழா கூட்டத்துக்கு வைத்திருந்த பேனர் சரிந்து விழுந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தவெக பேனர் சரிந்து விழுந்ததால் அரக்கோணம்திருப்பதி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சாலையில் விழுந்த பேனரை பொதுமக்கள் அப்புறப்புறப்படுத்த நிலையில் மீண்டும் போக்குவரத்து சீரானது






■ மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், இ.ஆ.ப., மதுரை மேற்கு வட்டம், துவரிமான் நாகமலை அடிவாரத்தில் அமைந்துள்ள புல்லூத்து நீரூற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது, நீரூற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு தடுப்புகள் அமைத்தல், நடைபாதை மற்றும் அணுகுச்சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர், கழிப்பறை, மின்விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்து சுற்றுலா மேம்பாட்டிற்கு ஏற்ற வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000